**10 - STD** **அடைவுத் தேர்வு - 2023 - 24**

**தமிழ்**

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள்: 100

YouTube/ Akwa Academy

1. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

1. 'மெத்தவணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது.
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும், ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும் ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்.

2. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள், இத்தொடரில் அடிகோடிட்ட பகுதி குறிப்பிடுவது.
அ) இலையும் சருகும், ஆ) தோகையும் சண்டும், இ) தாளும் ஓலையும், ஈ) சருகும் சண்டும்.

3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
அ) எந்+தமிழ்+நா, ஆ) எந்த+தமிழ்+நா, இ) எம்+தமிழ்+நா, ஈ) எந்தம்+தமிழ்+நா

4. 'கேட்டவர் மகிழப் பாடியபாடல் இது'-தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற் பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே-
அ) பாடிய;கேட்டவர் ஆ) பாடல்;பாடிய இ) கேட்டவர்;பாடிய, ஈ) பாடல்;கேட்டவர்

5. வேர்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை-
அ) குலைவகை, ஆ) மணிவகை, இ) கொழுந்துவகை, ஈ) இலைவகை.

6. 'சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும்-என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்' என்று கூறியவர்.
அ) பெருஞ்சித்திரனார் ஆ) பாவாணர், இ) க.சச்சிதானந்தன், ஈ) தமிழழகனார்.

7. பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர்.
அ) சூரியநாராயணசாஸ்திரி, ஆ) துரை.மாணிக்கம், இ) மு.இராஜகோபாலன் ஈ) மா.இராமலிங்கம்.

8. 'நாடும் மொழியும் நமதிருகண்கள்' -என்றுகூறியவர்.
அ) பாரதிதாசன், ஆ) இளங்கோவடிகள், இ) கம்பர், ஈ) பாரதியார்.

9. 'மொழிஞாயிறு'-என்று அழைக்கப்படுபவர்.-
அ), ம.பொ.சி. ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) தேவநேயப் பாவாணர்.

10. ஒரு சொல்லோ, சொற்றொடரோ இரு பொருள்பட வருவது-
அ) உவமை அணி, ஆ) வேற்றுமைத் தொகை, இ) இரட்டுற மொழிதல் அணி, ஈ) தீவக அணி.

11. "உனக்குப் பாட்டுகள்பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" - பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை, ஆ) மோனை, எதுகை, இ) முரண், இயைபு, ஈ) உவமை, எதுகை.

12. செய்தி 1 -ஒவ்வோர் ஆண்டும் ஜுன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
செய்தி 2 -காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
செய்தி 3 -காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!
அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

13. "பாடு இமிழ்பனிக் கடல் பருகி"என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தியாது?
அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

14. 'பெரியமீசை' சிரித்தார் - அடிகோடிட்டவண்ணச் சொல்லுக்கான தொகையின் வகைஎது?
அ) பண்புத்தொகை, ஆ) உவமைத்தொகை, இ)அன்மொழித்தொகை, ஈ) உம்மைத்தொகை.

15. பொருந்தும் விடைவரிசையைத் தேர்ந்தெடுக்க.

| | | | |
|---|---|---|---|
| அ) கொண்டல் | - 1. மேற்கு. | | அ) 1, 2, 3, 4. |
| ஆ) கோடை | - 2. தெற்கு | | ஆ) 3, 1, 4, 2 |
| இ) வாடை | - 3. கிழக்கு | | இ) 4, 3, 2, 1 |
| ஈ) தென்றல் | - 4. வடக்கு | | ஈ) 3, 4, 1, 2. |

16. 'நீடுதுயில்நீக்கப் பாடிவந்த நிலா' என்று பாராட்டப்பட்டவர்----
அ) கம்பர் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) பெருஞ்சித்திரனார்

17. பின்வருவனவற்றுள் முறையான தொடர்-
அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில்தனித்த இடமுண்டு.
இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

18. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி"என்னும் அடியில் பாக்கம் என்பது-
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர், ஈ) சிற்றூர்.

19. அறிஞருக்குநூல், அறிஞரதுநூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது.
அ) வேற்றுமை உருபு, ஆ) எழுவாய், இ) உவமஉருபு, ஈ) உரிச்சொல்.

20. காசிக் காண்டம் என்பது-
அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல், ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்.
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல், ஈ) காசி நகரத்திற்குவழிப்படுத்தும் நூல்.

21. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு'. -இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை-
அ) நிலத்திற்கேற்ற விருந்து, ஆ) இன்மையிலும் விருந்து,
இ)அல்லிலும் விருந்து, ஈ) உற்றாரின் விருந்து.

22. 'அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்' இவ்வடி இடம் பெற்றநூல்.
அ) நற்றிணை ஆ) புறநானூறு இ) பரிபாடல் ஈ) சிலப்பதிகாரம்

23. 'மருந்தே ஆயினும் விருந்தொடு உண்' என்று பாடியவர்.------
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) ஔவையார் ஈ) நப்பூதனார்



Scanned with CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

24. 'கூத்தராற்றுப்படை' என்று அழைக்கப்படும் நூல் ------
அ) நற்றினை ஆ) குறுந்தொகை இ) மலைபடுகடாம் ஈ) பரிபாடல்
25. தொகாநிலைத் தொடர்கள் ------ வகைப்படும். அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9
26. 'உனதருளேபார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்
27. தலைப்புக்கும் குறிப்புக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.
தலைப்பு : செயற்கை நுண்ணறிவு
குறிப்புகள். கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது.
அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.
ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.
இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.
ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.
28. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்.
29. குலசேகர ஆழ்வார் 'வித்துவக் கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம் பெற்றுள்ள வழுவமைதி முறையே-
அ) மரபு வழுவமைதி, திணைவழுவமைதி, ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி
இ) பால் வழுவமைதி, திணைவழுவமைதி, ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி.
30. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென் பொருள் எது? அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
31. 'அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார்'- இது -----வழுவமைதி ஆகும்.
அ) மரபு வழுவமைதி ஆ) கால வழுவமைதி இ) இட வழுவமைதி ஈ) திணை வழுவமைதி.
32. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி---
அ) சங்ககாலத்தில் மொழி பெயர்ப்பு இருந்தது. ஆ) காப்பியக் காலத்தில் மொழி பெயர்ப்பு இருந்தது.
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழி பெயர்ப்பு இருந்தது. ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழி பெயர்ப்பு இருந்தது.
33. அருந்துணை என்பதைப் பிரித்தால்-----
அ) அருமை + துணை, ஆ) அரு + துணை, இ) அருமை + இணை, ஈ) அரு + இணை.
34. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கன் கேட்டது ---- வினா.
"அதோ, அங்கேநிற்கும்." என்று மற்றொருவர் கூறியது -----விடை.
அ) ஐயவினா, வினாஎதிர் வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை
இ) அறியாவினா, சுட்டு விடை ஈ) கொளல்வினா, இனமொழிவிடை
35. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை" - என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்.
36. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ------, இடைக்காடனாரிடம் அன்புவைத்தவர் -----
அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன் இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்
37. குறிப்பு விடைகள் ------- வகைப்படும். அ) 5, ஆ) 3, இ) 4, ஈ) 2.
38. 'சதம்' என்பதன் பொருள்----, அ) கல்வி, ஆ) நூறு, இ) செல்வம், ஈ)ஒரு நூலின் பெயர்.
39. வினா ----- வகைப்படும். அ) 8, ஆ) 6, இ) 7, ஈ) 9.
40. பொருள்கோள் ------ வகைப்படும். அ) 10, ஆ) 6, இ) 8, ஈ) 7.
41. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்------
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள். ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்.
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள். ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்.
42. ஒயிலாட்டத்தில்இருவரிசையில்நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத் தொடர் எது?
அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்றுஆடுவர். ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
இ) ஒயிலாட்டம் இரு வரிசையில் நின்று ஆடப்படுகிறது. ஈ) ஒயிலாட்டம் இரு வரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.
43. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?
அ) அள்ளி முகர்ந்தால். ஆ) தளரப் பிணைத்தால். இ) இறுக்கி முடிச்சிட்டால். ஈ) காம்பு முறிந்தால்.
44. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும், குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?
அ) கரகாட்டம் என்றால் என்ன?, ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
இ) கரகாட்டத்தின் வேறு வேறு வடிவங்கள் யாவை? ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?
45. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால். ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்.
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால். ஈ) அங்கு வறுமை இல்லாததால்.
46. அன்புடைய தலைவன் தலைவி இடையிலான உறவு நிலைகளைப் பற்றி கூறுவது-----திணை.
அ) புறத்திணை. ஆ) அகத்திணை. இ) பெருந்திணை. ஈ) பாடாண் திணை.
47. மருத நிலத்திற்கான தெய்வம் ------ அ) முருகன். ஆ) திருமாள். இ) இந்திரன். ஈ) வருணன்.
48. நெய்தல் நிலத்திற்கான சிறுபொழுது------அ) வைகறை. ஆ) எற்பாடு. இ) நண்பகல். ஈ) மாலை.
49. கம்பரை ஆதரித்தவர்-----. அ) பாரதியார். ஆ) சடையப்பவள்ளல். இ) திருவள்ளுவர். ஈ) ஔவையார்.
50. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.
அ) உழவு, மண், ஏர், மாடு. ஆ) மண், மாடு, ஏர், உழவு. இ) உழவு, ஏர், மண், மாடு. ஈ) ஏர், உழவு, மாடு, மண்.
51. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்'- மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே-
அ) திருப்பதியும் திருத்தணியும். ஆ) திருத்தணியும் திருப்பதியும்.
இ) திருப்பதியும் திருச்செந்தூரும். ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்.



Scanned with CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

52. 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்-
அ) மேம்பட்ட நிருவாகத் திறன் பெற்றவர். ஆ) மிகுந்த செல்வம் உடையவர்.
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர். ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்.
53. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்----
அ) நாட்டைக் கைப்பற்றல். ஆ) ஆநிரை கவர்தல். இ) வலிமையை நிலைநாட்டல். ஈ) கோட்டையை முற்றுகையிடல்.
54. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி.கருதியது------
அ) திருக்குறள். ஆ) புறநானூறு. இ) கம்பராமாயணம். ஈ) சிலப்பதிகாரம்.
55. புறத்திணைகள் ------- வகைப்படும். அ) 7 ஆ) 8 இ) 12 ஈ) 10
56. மதில் போர் பற்றிய திணைகள்-----.
அ) தும்பை, வாகை. ஆ) வெட்சி, கரந்தை. இ) பாடாண், பொதுவியல். ஈ) நொச்சி, உழிஞை.
57. 'இசைப்பேரரசி' என்று நேரு பெருமகனாரால் அழைக்கப்பட்டவர்-----
அ) பாலசரஸ்வதி. ஆ) எம்.எஸ்.சுப்புலட்சுமி. இ) ராஜம் கிருஷ்ணன். ஈ) சின்னபிள்ளை.
58. 'சிலம்புச் செல்வர்' என்று போற்றப்படுபவர்-------
அ) இளங்கோவடிகள். ஆ) கம்பர். இ) ம.பொ.சிவஞானம். ஈ) கு.ப.ராஜ கோபாலன்.
59. "செல்வத்தின் பயனே ஈதல்" -இவ்வடி இடம் பெற்றநூல்-------
அ) சிலப்பதிகாரம். ஆ) கலித்தொகை. இ) நற்றிணை. ஈ) புறநானூறு.
60. தண்டும் கொடியுமாக ----- ஐ பூரணர் வரச் சொன்னார்.
அ) முதலியாண்டான். ஆ) இராமானுசர். இ) கூரேசர். ஈ) பூரணர்.
61. மேன்மை தரும் அறம் என்பது-----
அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது. ஆ) மறு பிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது.
இ) புகழ் கருதி அறம் செய்வது. ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது.
62. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது-----
அ) காலம் மாறுவதை. ஆ) வீட்டைத் துடைப்பதை.
இ) இடையறாது அறப்பணி செய்தலை. ஈ) வண்ணம் பூசுவதை
63. உலக மேவறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்.
அ) உதியன்;சேரலாதன். ஆ) அதியன்;பெருஞ்சாத்தன்,
இ) பேகன்; கிள்ளிவளவன். ஈ) நெடுஞ்செழியன்;திருமுடிக்காரி.

YouTube/ Akwa Academy

64. காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர்----
அ) இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது. ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்து விடாது.
இ) இகழ்ந்தால் இறந்து விடாது என்மனம். ஈ) என்மனம் இறந்து விடாது இகழ்ந்தால்.
65. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்தபாவினம்-----
அ) அகவற்பா. ஆ) வெண்பா. இ) வஞ்சிப்பா. ஈ) கலிப்பா.
66. கலிப்பாவுக்கு உரிய ஓசை.----- அ) தூங்கல் ஓசை. ஆ) துள்ளல் ஓசை. இ) அகவல் ஓசை, ஈ) செப்பல் ஓசை.
67. 'இஸ்மாத் சன்னியாசி' என்பதன் பொருள்-----அ) துறவி. ஆ) தூய துறவி. இ) புலவர். ஈ) உரையாசிரியர்.
68. "இவள்தலையில்எழுதியதோ
கற்காலம்தான் எப்போதும்..." -இவ்வடிகளில் கற்காலம் என்பது.
அ) தலை விதி. ஆ) பழைய காலம். இ) ஏழ்மை. ஈ) தலையில் கல் சுமப்பது.
69. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது—
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல். ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்.
ஆ) அறிவியல் முன்னேற்றம். ஈ) வெளிநாட்டு முதலீடுகள்.
70. பூக்கையைக் குவித்துப் பூவேபுரிவொடுகாக்க என்று ------, ------ வேண்டினார்.
அ) கருணையன் எலிசபெத்துக்காக, ஆ) எலிசபெத் தமக்காக,
இ) கருணையன் பூக்களுக்காக. ஈ) எலிசபெத் பூமிக்காக.
71. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி
அ) உவமை. ஆ) தற்குறிப்பேற்றம். இ) உருவகம். ஈ) தீவகம்.
72. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன்-
இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது ---
அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்.
ஆ) சமுகப் பார்வையோடு கலைப்பணிபுரியவே எழுதினார்.
இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார். ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்.
73. 'கானடை' என்பதைப் பிரித்தால், பொருந்தாத தொடரைத் தேர்க.
அ) கான் அடை -காட்டைச் சேர். ஆ) கான் நடை-காட்டுக்கு நடத்தல்.
இ) கால்நடை-காலால் நடத்தல். ஈ) கால்உடை-காலால் உடைத்தல்.
74. மெய்க்கீர்த்தி என்பது.----
அ) புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லால் பொறிக்கப்படுபவை.
ஆ) மன்னர்களின் புகழை ஓலைச் சுவடிகளில் எழுதிவைப்பது.
இ) ஒருவரது புகழைப் புலவர்கள் புகழ்ந்து பாடும் இலக்கிய வகை. ஈ) அறக்கருத்துகள்அடங்கியநூல்.
75. சாகித்ய அகாதெமி விருது பெற்ற கண்ணதாசனின் புதினம்---
அ) ஆதிமந்தி ஆட்டனத்தி. ஆ) இயேசு காவியம். இ) சேரமான் காதலி. ஈ) அர்த்தமுள்ள இந்து மதம்.
76. "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" -இப் பழமொழி உணர்த்தும் பொருள்.----
அ) காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டு விடும்.
ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாக செய்து விட வேண்டும்.
இ) காலம் வரும் வரை முயன்று கொண்டே இருக்க வேண்டும்.
ஈ) உரிய காலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேட வேண்டும்.



Scanned with CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

YouTube/ Akwa Academy

2. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி.
"யாழிசைஇனவண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழிகொண்ட, நறுவீமுல்லை
அரும்பு அவிழ் அலரிதூஉய், கைதொழுது,
பெருமுதுபெண்டிர், விரிச்சிநிற்ப"

77. இப்பாடல் இடம் பெற்றநூல் எது? அ) காசிக்காண்டம், ஆ) முல்லைப்பாட்டு, இ) மதுரைக்காஞ்சி, ஈ) கனிச்சாறு.
78. 'விரிச்சி' -என்றசொல்லின் பொருள்---- அ) வானம், ஆ) கன்று, இ) நற்சொல், ஈ) விரிவானம்.
79. கைதொழுது- இலக்கணக் குறிப்பு தருக.
அ) பண்புத்தொகை ஆ) இரண்டாம் வேற்றுமைத்தொகை, இ) மூன்றாம் வேற்றுமைத்தொகைஈ) வினைத்தொகை
80. இப்பாடலில் இடம் பெற்ற அடி எதுகைச் சொற்கள்.
அ) யாழ்இசை, நெல்லொடு, ஆ) அரும்பு, பெருமுது, இ) நாழி, நறுவி, ஈ) ஆர்ப்ப, நிற்ப.
"உந்திஉணர் வெழுப்பஉள்ளக் கனல்முளச்
செந்தாமரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த
அந்தும்பிபாடும் அதுபோலயாம்பாடி
முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!"
81. இப்பாடலின் ஆசிரியர்--- அ) பாரதியார். ஆ) பாரதிதாசன். இ) பெருஞ்சித்திரனார், ஈ) தமிழழகனார்.
82. பண்புத் தொகையைத் தேர்ந்தெடுக்க.—
அ) செந்தாமரை. ஆ) வீசுதென்றல். இ) உணர் வெழுப்ப. ஈ) சிறகார்ந்த.
83. தும்பி என்னும் சொல்லுக்கான பொருளைத் தேர்க. அ) கனல். ஆ) உந்தி. இ) யாண்டும். ஈ) வண்டு.
84. இப்பாடல் இடம் பெற்ற நூல்---
அ) உலகியல் நூறு. ஆ) பாவியக் கொத்து. இ) கனிச்சாறு. ஈ) எண்சுவை.
"செந்தமிழே!உள்ளுயிரேசெப்பரியநின்பெருமை
ஏந்தமிழ்நாஎவ்வாறுஎடுத்தேஉரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்தஇலக்கியமும்
விந்தைநெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்".
85. ஏந்தமிழ்நா என்பதனைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
அ) ஏந்+தமிழ்+நா. ஆ) ஏந்த+தமிழ்+நா. இ) ஏம்+தமிழ்+நா. ஈ) ஏந்தம்+தமிழ்+நா.
86. செந்தமிழ் என்பது.---
அ) பண்புத் தொகை, ஆ) வினைத் தொகை. இ) உவமைத் தொகை. ஈ) உம்மைத் தொகை.
87. உள்ளுயிரேஎன்றுகவிஞர் யாரைஅழைக்கிறார்?
அ) தம் தாயை. ஆ) தமிழ் மொழியை. இ) தாய் நாட்டை. ஈ) தம் குழந்தையை.
88. வேறார் புகழுரையும் - இத்தொடரில் 'வேறார்' என்பது.
அ) தமிழர். ஆ) சான்றோர். இ) வேற்றுமொழியினர். ஈ) புலவர்.
"பகர்வனர் திரிதருநகரவீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டுநுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"
89. இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது?
அ) நீதி வெண்பா. ஆ) புறநானூறு. இ)மணிமேகலை. ஈ) சிலப்பதிகாரம்.
90. பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.
அ) பகர்வனர்;பட்டினும். ஆ) பட்டினும்;கட்டினும். இ) கட்டும்;தூசும். ஈ) பட்டினும்;மயிரினும்.
91. காருகர் - பொருள்தருக. அ) உழவர். ஆ) நெசவாளர். இ) பொற்கொல்லர். ஈ) காவலர்.
92. இப்பாடலில் குறிப்பிடப்படும் நறுமணப் பொருள்கள்.
அ) பூக்களும்;சந்தனமும். ஆ) பூக்களும்;அகிலும். இ) அகிலும்;சந்தனமும். ஈ) பட்டும்;சந்தனமும்.
பூக்கையைக் குவித்துப் பூவேபுரிவொடுகாக்கென்றுஅப்பூஞ்
சேக்கையைப் பரப்பிஇங்கண் திருந்தியஅறத்தையாவும்
யாக்கையைப் பிணித்தென்று ஆகஇனிதிலுள் அடக்கி வாய்ந்த
ஆக்கையை அடக்கிப் பூவோடு அழுங்கணாபொழிந்தான் மிதே
93. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
அ) காலக்கணிதம். ஆ) சிலப்பதிகாரம். இ) தேம்பாவணி. ஈ) நீதி வெண்பா.
94. இப்பாடலின் ஆசிரியர்--- அ) பரஞ்சோதிமுனிவர். ஆ) கீரந்தையார். இ) கம்பர். ஈ) வீரமாமுனிவர்.
95. பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைகளை எழுதுக.
அ) பூக்கையை, பூவே. ஆ) ஆக்கையை, அடக்கி. இ) பூக்கையை, சேக்கையை. ஈ) இனிதிலுள், அடக்கி.
96. சேக்கை-பொருள் தருக. அ) படுக்கை. ஆ) உடல். இ) உணவு. ஈ) மலர்.
'விசும்பில்ஊழிஊழ்ஊழ்செல்லக்
கருவளர் வானத்து இசையில் தோன்றி,
உருஅறிவாராஒன்றன் ஊழியும்;
உந்துவளி கிளர்ந்த ஊழிஊழ் ஊழியும்'
97. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது? அ) சிலப்பதிகாரம். ஆ) காசிக்காண்டம். இ) பரிபாடல். ஈ) கொய்யாக்கனி.
98. இப்பாடலின் ஆசிரியர்--- அ) குலசேகராழ்வார். ஆ) கீரந்தையார் இ) குமரகுருபரர். ஈ) இளங்கோவடிகள்.
99. 'ஊழ்ஊழ்' - இலக்கணக் குறிப்பு தருக.
அ) அடுக்குத்தொடர். ஆ) இரட்டைக்கிளவி. இ) பெயரெச்சம். ஈ) வினைத்தொகை.
100. விசும்பு என்ற சொல்லின் பொருள்--- அ) பூமி. ஆ) வானம். இ) நிலவு. ஈ) எல்.



Scanned with CamScanner